இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100
1924 - 2023

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in facebook.com/murasoli180 twitter.com/murasoli180 instagram.com/murasoli180 youtube.com/murasoli180 murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 28 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – ஆவணி 20 – புதன்கிழமை 06 செப்டம்பர் 2023 – மதுரை 12 பக்கங்கள் Established: 10.8.1942 - Volume: 82 - Issue 28: Thiruvalluvar Year - 2054 - Aavani 20 - Wednesday 06 September 2023 - Madurai 12 Pages ₹ 5.00



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (5.9.2023) செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் சென்னை காந்தி மண்டப வளாகத்தில், சென்னை மாகாணத்தின் முன்னாள் முதலமைச்சர் டாக்டர் ப.சுப்பராயன் அவர்களுக்கு அமைக்கப்பட்டுள்ள திருவுருவச் சிலையை திறந்து வைத்தார். மேலும் 'கப்பலோட்டிய தமிழன்' வ.உ.சிதம்பரனார் அவர்களின் 152வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை, கிண்டி, காந்தி மண்டப வளாகத்தில் உள்ள வ.உ.சி அவர்களின் திருவுருவச் சிலைக்கு அருகில் வைக்கப்பட்டுள்ள அவரது திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார். இந்நிகழ்ச்சியில், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ.பெரியசாமி, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள் இ.ஆர்.ஈஸ்வரன், ஏ.எம்.வி.பிரபாகரராஜா, ஜே.எம்.எச்.ஹசன் மௌலானா, துணை மேயர் மு. மகேஷ் குமார், பொதுப்பணித் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் பி.சந்தர மோகன், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் மரு. இரா.செல்வராஜ், செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் த.மோகன், டாக்டர் ப.சுப்பராயன் அவர்களின் கொள்ளுப் பேரன் மோகன் குமாரமங்கலம் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

### மாணவச் செல்வங்களின் வாழ்க்கைப் பயணத்துக்கு

# ஆசிரியர்கள் வழிகாட்டும் கலங்கரை விளக்கங்களே!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆசிரியர் தின வாழ்த்துச் செய்தி!

**சென்னை, செப். 6 -**

**செப். 5 - ஆசிரியர் தினத்தை முன்னிட்டு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வாழ்த்துச் செய்தி ஒன்றை வெளியிட்டுள்ளார். அதில், "வாழ்க்கைப் பயணத்துக்கு வாழ்நாளெல்லாம் வழிகாட்டும் கலங்கரை விளக்கு ஆசிரியர்கள்" என்று குறிப்பிட்டுள்ளார்.**



ஒவ்வொரு ஆண்டும், டாக்டர் ராதாகிருஷ்ணனின் பிறந்த நாளை (செப்டம்பர் 5), ஆசிரியராக அவரது பங்களிப்புகள் மற்றும் சாதனைகளுக்கு மரியாதை செலுத்தும் வகையில், ஆசிரியர் தினமாக இந்தியா கொண்டாடுகிறது.

டாக்டர் ராதாகிருஷ்ணன் வட ஆற்காடு மாவட்டத்தின் திருத்தணியில் பிறந்தார்.

டாக்டர் ராதாகிருஷ்ணன் தனது முழுக் கல்வியையும் உதவித் தொகை மூலம் முடித்தார். அவர் தத்துவத்தில் முதுகலைப் பட்டம் பெற்றவர் ஆவார். 1917 இல் 'ரவீந்திரநாத் தாகூரின் தத்துவம்' என்ற புத்தகத்தை எழுதினார். 1931 முதல் 1936 வரை ஆந்திரப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராகவும், மதன் மோகன் மாளவியாவுக்குப் பிறகு 1939 இல் பனாரஸ் இந்து பல்கலைக்கழகத்தின் (BHU) துணைவேந்தராகவும் பணியாற்றினார்.

டாக்டர் ராதாகிருஷ்ணன் 1909 இல், சென்னையின் பிரசிடென்சி கல்லூரியிலும் 1921 இல் கல்கத்தா பல்கலைக்கழகத்திலும் பணியாற்றினார். அவருக்கு 1954 இல் இந்தியாவின் மிக உயரிய சிவிலியன் விருதான பாரத ரத்னா வழங்கப்பட்டது. அவர் 1963 இல் பிரிட்டிஷ் ராயல் ஆர்டர் ஆஃப் மெரிட்டின் கௌரவ உறுப்பினராக அனுமதிக்கப்பட்டார்.

'எனது பிறந்த நாளைக் கொண்டாடுவதற்குப் பதிலாக, செப்டம்பர் 5ஆம் தேதியை ஆசிரியர் தினமாகக் கொண்டாடினால் அது எனது பெருமைக்குரிய பாக்கியமாக இருக்கும்' என்று டாக்டர் ராதாகிருஷ்ணன் அவர்கள் கூறினார்.

டாக்டர் ராதாகிருஷ்ணன் 1962 ஆம் ஆண்டு இந்தியாவின் குடியரசுத் தலைவராகப் பணியாற்றியபோது, அவரது பிறந்த நாளான செப்டம்பர் 5ஆம் தேதியை ஒரு சிறப்பு நாளாகக் கொண்டாட அனுமதி கோரி அவருடைய மாணவர்கள் அவரை அணுகினர். இதற்கு பதிலாக டாக்டர் ராதாகிருஷ்ணன், சமுதாயத்திற்கு ஆசிரியர்களின் பங்களிப்பை அங்கீகரிக்கும் வகையில் செப்டம்பர் 5ம் தேதியை ஆசிரியர் தினமாக கடைப்பிடிக்க வேண்டும் என்று கோரிக்கை வைத்தார்.

நம் வாழ்வில் ஆசிரியர்களின் முக்கியத்துவத்தை எடுத்துரைக்கவும், சமூகத்திற்கு அவர்களின் பங்களிப்பை அங்கீகரிக்கவும் ஆசிரியர் தினம் கொண்டாடப்பட்டு வருகிறது.

ஆசிரியர் தினத்தை கொண்டாடும் வகையில், பெரும்பாலான பள்ளிகள் கலாச்சார செயல்பாடுகளை ஏற்பாடு செய்கின்றன, அதில் மாணவர்கள் ஆசிரியர்களின் பணிக்காக பாடல்கள், நடனங்கள், நாடகங்கள், சிறுகதைகள், கவிதைகள் மற்றும் பலவற்றின் வடிவில் நன்றி தெரிவித்து இத்தினத்தை கொண்டாடுகின்றனர்.

இந்நிலையில் ஆசிரியர் தினத்தை முன்னிட்டு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தி வருமாறு:-

**செப்டம்பர் 5 ஆசிரியர் தினம்! தாய் தந்தைக்கு அடுத்து மூன்றாவது இடத்தில் வைத்து வணங்கத்தக்கவர்கள் ஆசிரியப் பெருமக்கள். மாணவச் செல்வங்களை அறிவாற்றல் கொண்டவர்களாய் வளர்த்தெடுத்து வாழ்க்கைப் பயணத்துக்கு வாழ்நாளெல்லாம் வழிகாட்டும் கலங்கரை விளக்கே கல்வித்துறை ஆசிரியர்கள். கல்வியுடன் இணைந்து உயரிய பண்பாட்டையும் அறநெறிகளையும் ஒழுக்கத்தையும் சமூக நல்லிணக்கத்தையும் மாணவ சமுதாயத்துக்குக் கற்றுத்தரும் அறிவுப் பெற்றோராக ஆசிரியர்கள் செயல்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். தன்னை உருக்கி அறிவூட்டும் ஆசிரியப் பெருமக்களுக்கு எனது மனமார்ந்த நல்வாழ்த்துகள்!**

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தமது வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

---

### புதிய காற்றழுத்த தாழ்வு நிலை!

## தமிழ்நாட்டில் 8-ம் தேதி வரை மழை!

சென்னை, செப். 6 -

வடமேற்கு மற்றும் அதனை ஒட்டிய மத்திய மேற்கு வங்கக்கடலில் புதிய காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாகி உள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

சென்னை, வானிலை ஆய்வு மையம் நேற்று வெளியிட்ட செய்திக்குறிப்பில், வடக்கு வங்கக்கடல் பகுதியில் வளிமண்டல சுழற்சி நிலவுவதாகவும், இதன் காரணமாக வரும் 24 மணி நேரத்தில் புதிய காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாக வாய்ப்பிருப்பதாகவும், இது பருவ மழையை உருவாக்கும் காரணியாக இருக்கும் என்பதால் தமிழ்நாட்டில் சில இடங்களில் மழை தொடரும் என்றும், கடலோர பகுதிகளில் மாலை நேரங்களில் மழைக்கு வாய்ப்பு இருப்பதாகவும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்திருந்தது.

இந்நிலையில் வடமேற்கு மற்றும் அதனை ஒட்டிய மத்திய மேற்கு வங்கக்கடலில் புதிய காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாகி உள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இதன் காரணமாக வரும் 8ம் தேதி வரை தமிழகம், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் கனமழைக்கு வாய்ப்பு உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

### முரசொலி அறக்கட்டளை தொடர்பாக கருத்து!

## எல்.முருகன் மீதான அவதூறு வழக்கை ரத்து செய்ய முடியாது!

### சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவு!

சென்னை, செப். 6 -

முரசொலி அறக்கட்டளை தொடர்ந்த வழக்கில் ஒன்றிய இணை அமைச்சர் எல்.முருகன் மீதான அவதூறு வழக்கை ரத்து செய்ய மறுப்பு தெரிவித்துள்ள சென்னை உயர் நீதிமன்றம், வழக்கின் விசாரணையை மூன்று மாதங்களில் முடிக்க சிறப்பு நீதிமன்றத்துக்கு உத்தரவிட்டுள்ளது.

தமிழக பா.ஜ.க. தலைவராக இருந்த போது, முரசொலி அறக்கட்டளை தொடர்பாக அவதூறு பரப்பும் வகையில் எல்.முருகன் கருத்து தெரிவித்திருந்தார். இதனையடுத்து எல்.முருகனுக்கு எதிராக முரசொலி அறக்கட்டளை சார்பில் அவதூறு வழக்கு தொடரப்பட்டது.

இந்த வழக்கு, சென்னை எம்.பி., எம்.எல்.ஏ.க்கள் மீதான வழக்குகளை விசாரிக்கும் சிறப்பு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது.

இந்நிலையில் இந்த வழக்கை ரத்து செய்யக் கோரி சென்னை உயர்நீதிமன்றத்தில் எல்.முருகன் மனு தாக்கல் செய்திருந்தார்.

இந்த மனுவை விசாரித்த நீதிமன்றம், எல்.முருகன் மீதான அவதூறு வழக்கை ரத்து செய்ய மறுப்பு தெரிவித்து, மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட்டது. அத்துடன் வழக்கின் விசாரணையை மூன்று மாதங்களில் முடிக்கவும் சிறப்பு நீதிமன்றத்துக்கு உத்தரவு பிறப்பித்தது.

---

### ஒரே தேர்தல் நடத்திவிட்டு

# தேர்தல் ஆணையம் 5 ஆண்டுகளுக்கு "கோல்ப்" விளையாடலாம்!

## முன்னாள் தலைமைத் தேர்தல் அதிகாரி குரேஷி கிண்டல்!

புதுதில்லி, செப். 6 -

"ஒரு நாடு ஒரே தேர்தல்' என்ற பேச்சு கடந்த 10 ஆண்டுகளாக நடந்து வருகிறது. இதில் சில நன்மைகள் மற்றும் சில தீமைகள் உள்ளன. அடிக்கடி தேர்தல் நடத்துவதால் பெரும் செலவு ஏற்படுவதாகவும், வளர்ச்சிப் பணிகள் பாதிக்கப்படுவதாகவும் கூறப்படுகிறது. தேர்தல் என்பது ஜனநாயகத்தின் திருவிழா. அது ஏழைகளின் பண்டிகையாகும், ஏனெனில் வாக்கு மட்டுமே அவர்களுக்கு இருக்கும் ஒரே சக்தி" என்று குரேஷி கூறியிருக்கிறார். "இன்று ஒரே நாடு, ஒரே தேர்தல்' என்று சொல்பவர்கள், நாளை 'ஒரே நாடு, ஒரே அரசியல் கட்சி ஏன் கூடாது?' என்று கேட்கலாம். பிறகு, 'ஒரே கட்சி, ஒரே தலைவர்' ஏன் இருக்கக்கூடாது? என்றும் சொல்லலாம்; அவ்வாறு கிளம்பினால் அதற்கு முடிவே இல்லை. நாட்டின் பெயரால் நீங்கள் (பா.ஜ.க. ஆட்சியாளர்கள்) பரப்பும் இந்த தேசியவாதம் எங்கே போய் முடியும்.. அதை எப்படி அடைவீர்கள்?" என்றும் குரோஷி கேள்வி எழுப்பியுள்ளார்.

"இந்தியா ஒரு கூட்டாட்சி நாடு மற்றும் மாநிலங்களின் ஒன்றியம் என்பதால், 'ஒரே நாடு; ஒரே தேர்தல்' என்ற திட்டம் அரசியலமைப்பு ரீதியாக சாத்தியமில்லை" என்பதை சுட்டிக்காட்டியிருக்கும் முன்னாள் தலைமைத் தேர்தல் ஆணையர் எஸ். ஒய். குரேஷி, "நாடு முழுவதும் ஒரே நேரத்தில் தேர்தலை நடத்த வேண்டுமானால், சில சட்டப்பேரவைகளின் பதவிக்காலத்தை அதிகரிக்க வேண்டும், மேலும் சில சட்டப்பேரவைகளின் பதவிக்காலத்தை குறைக்க வேண்டும்" என்று தெரிவிக்கும் அவர், "ஒரே நேரத்தில் தேர்தல் நடத்துவது நடைமுறை ரீதி யாக சாத்தியமில்லை" என்று தெரிவித்துள்ளார்.

**தேர்தல் ஆணையர்கள் கோல்ப் விளையாடலாம்..**

"தேர்தல் ஆணையத்தைப் பொறுத்த வரை, ஒரே நேரத்தில் தேர்தலை நடத்துவது மிகவும் எளிதானது, ஏனெனில் இந்த செயல்பாட்டில் ஒரு முறை மட்டுமே வாக்குப் பட்டியலைத் தயாரிக்க வேண்டும். அதே வாக்காளர், அதே வாக்குச் சாவடி மற்றும் மாவட்டத்தின் அமைப்பும் ஒரே மாதிரியாகவே இருக்கப் போகிறது. பாதுகாப்பு ஏற்பாடுகளும் தனித்தனியாக செய்யப்பட வேண்டியதில்லை. எனவே, இது தேர்தல் ஆணையத்திற்கு மிகவும் எளிமையான வேலையாக இருக்கும். தேர்தல் ஆணைய அதிகாரிகள் 5 ஆண்டு களுக்கு ஒருமுறை தேர்தல் நடத்திவிட்டு, அடுத்த 5 ஆண்டுகளுக்கு கோல்ப் விளையாடலாம்" என்று கிண்டலாக குரேஷி குறிப்பிட்டுள்ளார்.

---

திராவிடம் V/S சனாதனம்

